# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2025

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 2.30 மணி | பகுதி - 1 | மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7 x 1 = 7

1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் _______
அ) இராதாகிருஷ்ணன் ஆ) அம்பேத்கர் இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு
2. கவலைகள் _______ அல்ல
அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) கைக் குழந்தைகள்
3. அசை _______ வகைப்படும்
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
4. மக்கள் வாழும் நிலப் பகுதியைக் குறிக்கும் சொல் _______
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
5. ஒன்றே _______ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்
அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்
6. தொடக்கக் காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்குத் _______ பயன்படுத்தினார்கள்
அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை
7. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை _______
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:-** 4 x 1 = 4

8. புலியின் தோல் _______ மேய்ந்தற்று.
9. 'மாங்கனிநகரம்' என்று அழைக்கப்படும் நகரம் _______
10. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _______ மதிக்கின்றனர்.
11. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் _______

**III. பொருத்துக:-** 4 x 1 = 4

12. மதம் - மேன்மை
13. மையல் - கொள்கை
14. நிறை - பொறுமை
15. பொறை - விருப்பம்

பகுதி - 2

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:-** 5 x 2 = 10

16. நோயின் மூன்று வகைகள் யாவை?
17. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
18. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
19. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
20. பண்பு , அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
21. எது பெருமையைத் தரும்?
22. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
23. சான்றோர்க்கு அழகாவது எது?

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:-** 5 x 2 = 10

24. 'பா' எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
26. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
27. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
28. உலகம் எவற்றால் ஆனது.
29. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களில் நான்கினை எழுதுக?
30. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
31. சந்திப் பிழை என்றால் என்ன?

www.Padasalai.Net



Scanned with CamScanner

பகுதி - 3

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 x 3 = 15

32. நோய்கள் பெருகக்காரணம் என்ன?
33. நமக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
34. 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?
35. வேற்றுமை அணி என்றால் என்ன? எ.கா தருக.
36. உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
37. நல்ல, படுத்து, எறிந்த, கடந்து, அழைத்த, பார்த்து இவற்றில் பெயரெச்சம் , வினையெச்சம் பிரித்து எழுதுக:-
38. இருவகை அசைகளை விளக்குக:-
39. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக:-

பகுதி - 4

**VII. அடிமாறாமல் எழுதுக:-** 2 + 5 = 7

40. 'விடல்' என முடியும் குறளை எழுதுக:-
41. 'படமாடக் கோயில்' என தொடங்கும் ஒன்றே குலம் பாடலை அடிமாறாமல் எழுதுக:-

**VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:-** 2 x 4 = 8

42. ஏவல் வினை முற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
43. அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?
44. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக:-
45. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சிபாட்டல் கூறுகிறார்?

பகுதி - 5

**IX. மொழிப்பயிற்சி வினாக்களுக்குத் தகுந்த விடைகளை எழுதுக.**

46. ***பொருள் தருக:-*** 3 x 1 = 3
    1) பிணி 2) முகில் 3) மையல்
47. ***சேர்த்து எழுதுக:-*** 3 x 1 = 3
    1) நெடுமை + தேர் 2) வானம் + அறிந்து 3) தாம் + இனி
48. ***பிரித்து எழுதுக:-*** 3 x 1 = 3
    1) நலமெல்லாம் 2) போவதில்லை 3) இன்னோசை
49. ***பழமொழிகளை நிறைவு செய்க.*** 2 x 1 = 2
    1) நோயற்ற வாழ்வே ________ 2) கூடி வாழ்ந்தால் ________
50. ***சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-*** 2 x 1 = 2
    1) பால் ________ (குடி /பருகு) 2) கோழி ________ (கூவும் / கொக்கரிக்கும்)
51. ***வினை முற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக:-*** 2 x 1 = 2
    1) நடக்கிறது 2) பயின்றாள்
52. ***எவ்வகைத் தொடர் என எழுதுக:-*** 2 x 1 = 2
    1) காலையில் எழு 2) காடு மிகவும் அழகானது
53. ***உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க:-*** 2 x 1 = 2
    1) கிணற்றுத் தவளை போல 2) கண்ணும் கருத்துமாக
54. ***கலைச்சொற்களை எழுதுக:-*** 2 x 1 = 2
    1) Disease 2) Epigraph
55. ***தமிழெண்களை எழுது:-*** 2 x 1 = 2
    1) 25 2) 19

பகுதி - 6

**X. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:-** 1 x 6 = 6

56. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
57. அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**XI. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:-** 1 x 6 = 6

58. 'நான் விரும்பும் கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.
59. புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

******



Scanned with CamScanner